# மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம் (PGIMS)
## பேராதனை பல்கலைக்கழகம்
# பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

பேராதனை பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்கு பொருத்தமான தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் கட்டளை சட்டத்திற்கு அமைய பணிப்பாளரானவர் நிறுவகத்தின் முழுநேர அதிகாரியாகவும், முதன்மை நிறைவேற்று அதிகாரியாகவும், முதன்மை கல்விசார் அதிகாரியாகவும், நிறுவகத்தின் கணக்கியல் அதிகாரியாகவும் இருப்பார். பணிப்பாளரானவர் நிறுவகத்தின் பதவிநிலை உறுப்பினராகவும், முகாமைத்துவ சபையின் தலைவராகவும், நிறுவகத்தின் ஒவ்வொரு கற்கை சபைகளின் பதவிநிலை உறுப்பினராகவும் இருப்பார். இந்தப் பதவிக் காலம் மூன்று வருடங்கள் என்பதோடு, விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரஜைகளாகவும், விண்ணப்ப இறுதித்திகதிக்கு 63 வயதிற்கு குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

எதிர்பார்க்கப்படும் விண்ணப்பதாரர், குழு சான்றிதழ் அல்லது மருத்துவ சிறப்புக்களில் முனைவர் பட்ட (PhD அல்லது நிகரான) தகைமைகளைக் கொண்டிருத்தல் வெண்டும். கல்விசார் அமைப்பொன்றை நிருவாகப்படுத்தலின் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும். மேலும், விண்ணப்பதாரி பல்துறை கல்விசார் சூழல் ஒன்றில் பணியாற்றுவதற்கு தேவையான ஆளிடைத் திறன்களை கொண்டுள்ளவராகவும், நிறுவகத்தினால் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பொறுப்புக்களை உணர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் அவர் கல்விசார் தலைமைத்துவத்தை வழங்குவதற்கான பொறுப்பினையும் கொண்டிருப்பார்.

பணிப்பாளரானவர் இப்பதவிக்கு பொருந்தக்கூடிய சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

I. பிறந்த திகதி அடங்கலாக விண்ணப்பதாரியின் முழுமையான சுயதரவு.

II. நிறுவகத்தின் அபிவிருத்திக்கான சுய தொலைநோக்கு அறிக்கை மற்றும் விண்ணப்பதாரி பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் சாதிக்க திட்டமிட்டுள்ளவை பற்றிய சுருக்கப்பட்டியல்.

III. இப்பதவிக்கு விண்ணப்பதாரியானவர் நியமிக்கப்படுமிடத்து அவர் பணியாற்றும் அரசசேவை, கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட தாபனங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றின் தொழில் வழங்குநரிடமிருந்து அவர் விடுவிக்கப்படுவார் என்பதற்கான ஒரு கடிதம்.

விண்ணப்பமானது உதவிப்பதிவாளர், மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம், கெட்டம்பே, பேராதனை என முகவரியிடப்பட்டு, **2024 நவம்பர் 20ஆம் திகதி பி.ப. 3.30 க்கு அல்லது அதற்கு முன்னராக** வந்தடையும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பணிப்பாளர் பதவி, மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம்" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக, மேலுள்ள ஆவணங்கள் மற்றும் வேறு எந்த ஒரு ஆவணங்களையும் PDF வடிவத்தில் மென் பிரதிகளில் ar@pgims.pdn.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2024 ஜனவரி 01 ஆம் திகதியிடப்பட்ட 01/2024 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபத்தில் நிர்ணயிக்கப்பட்ட முறையை பின்பற்றி தேர்வு மேற்கொள்ளப்படும். பணிப்பாளர் பதவியின் நியமன நடைமுறை தொடர்பில் மேலதிக விபரங்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தை பார்க்கவும்.

மேலதிக விபரங்களுக்கு, சாதாரண அலுவலக நேரங்களில் 081 - 2389757 என்ற தொலைபெசி இலக்கத்தினூடாக மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவக உதவிப் பதிவாளரை தொடர்புகொள்ளவும்.

**உதவிப் பதிவாளர்**
**மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின்படிப்பு நிறுவகம்**
**பேராதனை பல்கலைக்கழகம்**
**2024 ஒக்டோபர் 20**